வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி பழனி

தேதி 15.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தமிழ்நாடு. கேரளா, மேற்கு வங்கம்,அஸ்ஸாம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் தேதியை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் இன்று அறிவித்தார்.

மை பாரத் பட்ஜெட் வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கலந்துரையாடுகிறார்.

புதுச்சேரியில் திமுக காங்கிரஸ் கூட்டணி 30 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஏனாமில் பள்ளி மாணவர்களுக்கு இலவச மடிக் கணினிகளை வழங்கினார்.

தேர்தல் ஆணையம்

தமிழ்நாடு. கேரளா, மேற்கு வங்கம்,அஸ்ஸாம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் தேதியை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் இன்று அறிவித்தார். அதன்படி, புதுச்சேரியில் சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெறும் என்றும் வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார். இதேபோல் தமிழகத்தில் வேட்புமனு தாக்கல் இம்மாதம் 30-ஆம் தேதி தொடங்கும் என்றும், வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி கடைசி நாள் என்றும் அவர் அறிவித்துள்ளார். வேட்புமனுக்கள் பரிசீலனை ஏப்ரல் 7-ஆம் தேதி நடைபெறும் என்றும் வேட்பு மனுக்களை திரும்ப பெற ஏப்ரல் 9-ஆம் தேதி கடைசி நாள் என்றும் அவர் தெரிவித்தார். வாக்குப் பதிவு ஏப்ரல் 23-ஆம் தேதி நடைபெறும் என்றும், மே மாதம் 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்படும் என்றும் திரு ஞானேஷ்குமார்

தெரிவித்தார். இதேபோல அஸ்ஸாமில் வாக்குப் பதிவு ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெறும் என்றும், மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்குவங்க மாநிலத்தில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என்றும், முதல் கட்ட தேர்தல் ஏப்ரல் 23-ஆம் தேதியும், 2-ஆம் கட்ட தேர்தல் ஏப்ரல் 29-ஆம் தேதியும் நடைபெறும் என அவர் தெரிவித்தார். வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4-ஆம் தேதி நடைபெறும் என்றும் திரு ஞானேஷ்குமார் தெரிவித்தார்.

கேரள மாநிலத்தில் ஏப்ரல் 9-ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும் என்றும், மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

*தேர்தல் நடத்தை விதிமுறைகள்*

5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

5 மாநில சட்டப்பேரவை தேர்தலைத் தொடர்ந்து கோவா, குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களில் 8 சட்டப்பேரவை தொகுதிளுக்கு இடைத் தேர்தலும் நடைபெற உள்ளது.

*எல்பிஜி*

மேற்கு ஆசியாவில் நிலவும் போர் சூழலால் எரிவாயு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்ள தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

புதுடெல்லியில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் பேசிய மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலாளர் திருமதி சுஜாதா சர்மா இதனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கூடுதல் தகவல்கள்.........

எரிவாயு விநியோகம் தொடர்பாக மக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும், எரிவாயு சிலிண்டர்களை கூடுதலாக பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினார். நகர்புறங்களில் அடுத்த முன் பதிவிற்கு 25 நாட்களும், கிராமப்புறங்களில் 45 நாட்களும் கட்டாய இடைவெளி இருக்க வேண்டும் என்றும் அவர் தெளிவுபடுத்தி உள்ளார். பதுக்கலைத் தடுக்க உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் ஆயிரத்து 400-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடத்தப்பட்டு 20-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். மேலும் வணிக எரிவாயு சிலிண்டர் தடுப்பாட்டை போக்க மாநில அரசுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு மாதம் உயிரி எரிபொருட்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 84 சதவிகித முன் பதிவுகள் தற்போது ஆன்-லைன் மூலமாகவே நடைபெறுவதை சுட்டிக்காட்டிய திருமதி சுஜாதா சர்மா விநியோகஸ்தர்கள் அலுவலகங்களுக்கு நேரில் வருவதை தவிர்த்து விதிமுறைகளை கடைபிடிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார். மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்பாதைகள் அமைச்சகத்தின் செயலாளர் திரு ராஜேஷ்குமார் சின்கா பேசுகையில் 2 இந்திய கப்பல்கள் பாதுகாப்பாக ஹார்முஸ் ஜலசந்தியை கடந்துள்ளதாக அவர் தெரிவித்தார். அக்கப்பலில் சுமார் 92 ஆயிரத்து 700 எல்பிஜி சிலிண்டர் இருந்த தாகவும் இக்கப்பல் நாளை அல்லது நாளை மறுநாள் இந்திய துறைமுகங்களில் இறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜலசந்தியின் மேற்குப் பகுதியில் மீதமுள்ள 22 இந்திய கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதை உறுதி செய்வதற்கான முயற்சிகள் நடந்து வருவதாக திரு சின்ஹா தெரிவித்தார்.

இதற்கிடையே, குழாய்வழி இயற்கை எரிவாயு மற்றும் திரவ பெட்ரோலிய எரிவாயு, எல்பிஜி இணைப்புகள் உள்ள வீடுகள் தங்கள் எல்பிஜி இணைப்பை

உடனடியாக ஒப்படைக்குமாறு மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இதில் எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்களுக்கு புதிய எல்பிஜி இணைப்புகளை வழங்கவோ, அல்லது குழாய் இயற்கை எரிவாயுவை அணுகும் நுகர்வோருக்கு ரீபில்களை வழங்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*மோடி-பட்ஜெட் வினாடி வினா*

மை பாரத் பட்ஜெட் வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கலந்துரையாடுகிறார். மத்திய பட்ஜெட் குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாடுவது இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளைய தலைமுறையினரின் பங்கை அதிகரிக்க இந்த போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டியில் சுமார் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

*அமித் ஷா*

அஸ்ஸாம் மாநிலம் குவஹாத்தியில் மருத்துவக் கல்லூரி மற்றும் புற்றுநோய் மையத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று திறந்து வைத்தார். இந்த நவீன மருத்துவமனை திறப்பு விழா நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சரும் பங்கேற்றார். நிகழ்ச்சியில் பேசிய திரு அமித் ஷா, இந்த மருத்துவமனை மற்றும் புற்றுநோய் மையம் இப்பகுதி மக்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்தார். தொடர்ந்து இன்று மாலை குவஹாத்தியில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் அவர் பங்கேற்க உள்ளார்.

*மோடி*

மேற்குவங்க மாநிலத்தில் கடந்த 10 ஆண்டுகளில் இந்துக்கள் சிறுபான்மையிராக மக்கள் தொகை குறைந்து விட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். கொல்கத்தாவில் நடைபெற்ற அரசு விழாவில் சுமார் 18

ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசினார்.

இதுகுறித்த கூடுதல் தகவல்கள்........

மேற்கு வங்க மாநிலத்தில் செயல்படுத்தப்படும் இந்த புதிய திட்டங்கள் சிறப்பு இந்தியாவிற்கு உற்சாகம் அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். மேற்குவங்கத்தில் ரயில்வே உட்கட்டமைப்பை விரைவாக விரிவுபடுத்த முயற்சி எடுத்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். சாலை ரயில்வே மற்றும் துறைமுக உள்கட்டமைப்புகள் தொடர்பாக 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிலான திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டதுடன் அவற்றிற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த திட்டம் மேற்குவங்கம் மற்றும் கிழக்கு இந்தியாவிற்கு ஒரு புதிய வேகத்தை அளிப்பதுடன் வர்த்தகம் மற்றும் தொழில்துறையை மேம்படுத்தி லட்சகணக்கான மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதோடு புதிய வாய்ப்புகளையும் உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கரக்பூர்- மோரோகிராம் விரைவுச் சாலை நிறைவடைவதன் மூலம் மேற்குவங்கத்தின் பல பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகள் வேகம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும் துப்ராஜ்பூர் புறவழிச்சாலை மற்றும் கன்சாவதி சிலாவதி ஆறுகளின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரிய பாலங்கள் மூலம் போக்குவரத்து இணைப்பும் மேம்படும் என்றும் அவர் கூறினார். இத்திட்டங்களுக்காக மேற்குவங்க மக்களுக்கும் ஒட்டு மொத்த நாட்டிற்கும் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறினார்.

*புதுச்சேரி திமுக-காங்கிரஸ் பங்கீடு*

புதுச்சேரியில் திமுக காங்கிரஸ் கூட்டணி 30 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று திமுக காங்கிரஸ் கட்சியின்

ஒருங்கிணைப்பாளர் திரு ஜெகத் ரட்சகன் தெரிவித்துள்ளார். புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தேர்தல் தலைமை குறித்து திமுக தலைவரும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு ராகுல்காந்தியும் முடிவு செய்வார்கள் என்று தெரிவித்தார். கூட்டணி தொடர்பாக எவ்வித குழப்பமும் இல்லை என்று தெரிவித்தார். நிகழ்ச்சியில் பேசிய காங்கிரஸ் தலைவர் திரு வைத்திலிங்கம் பேச்சு வார்த்தை சுமுகமாக நடைபெற்று வருகிறது என்றும் தொகுதி பங்கீடு எண்ணிக்கை விரைவில் முடிவாகும் என்றும் தெரிவித்தார். கூட்டணி தலைமை யார் என்பது சுமுகமான முறையில் பேசி முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக

சட்டப்பேரவை தேர்தல் குறித்து திமுக-காங்கிரஸ் இடையே தொகுதி பங்கீடு, சுமுகமாக நடந்து முடிந்துள்ளதாக இரு கட்சிகளும் அறிவித்துள்ளன. காங்கிரஸ் கட்சியின் மேலிட பொறுப்பாளர் திரு கிரிஷ் சோடங்கர் திமுகவுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். இக்கூட்டம் இன்று காலை முதல் தனியார் ஓட்டலில் நடந்து வருகிறது. இக்கூட்டத்தில் திரு ஜெகத் ரட்சகன், திரு வைத்திலிங்கம், திரு நாராயணசாமி, காங்கிரஸ் துணைத் தலைவர் திரு தேவதாஸ், முன்னாள் அமைச்சர்கள் திரு ஷாஜகான், திரு கந்தசாமி, மாநில திமுக அமைப்பாளர் திரு சிவா, ஆகியோர் பங்கேற்றனர்.

*ரங்கசாமி*

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஏனாம் சென்றுள்ளார். அங்கு பாலயோகி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களுக்கு சுமார் 240 இலவச மடிக் கணினிகளை வழங்கினார். மேலும் சலவை தொழிலாளர்களுக்கு 72 சலவை உபகரணங்களையும் அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு 7 புதிய டிராக்டர்களை வழங்கி கவுரவித்தார். தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்களையும் அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு பிரதிநிதி மல்லாடிகிருஷ்ணராவ், சட்டப்பேரவை துணை தலைவர் திரு

ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக் ஆகியோர் பங்கேற்றனர்.

பாஸ்டேக்

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 2026-27 நிதியாண்டிற்கான பாஸ்டேக் வருடாந்திர பாசிற்கான கட்டணத்தை தற்போது 3 ஆயிரம் ரூபாயில் இருந்து 3 ஆயிரத்து 75 ரூபாயாக உயர்த்தி உள்ளது. இக்கட்டண உயர்வு அடுத்த மாதம் முதல் அமலுக்கு வரும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தலைப்புச் செய்திகள்

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

தமிழ்நாடு. கேரளா, மேற்கு வங்கம்,அஸ்ஸாம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் நடைபெறும் தேதியை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ்குமார் இன்று அறிவித்தார்.

மை பாரத் பட்ஜெட் வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கலந்துரையாடுகிறார்.

புதுச்சேரியில் திமுக காங்கிரஸ் கூட்டணி 30 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஏனாமில் பள்ளி மாணவர்களுக்கு இலவச மடிக் கணினிகளை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 15.3.2026/Script.

----------------------